முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1124

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.10.2022, வியாழக்கிழமை

1. ஞானபலம் கொண்ட தவசியே
ஞானிகளை படைக்கும் யோகியே
ஞானபண்டிதன் என் சக்தியாக வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 10 ம் நாள் 27.10.2022 வியாழக்கிழமை)
வரமாக உன்னுள் என் சக்தி
வல்லமைபட கலந்து நிற்க
3. நிற்கவே உன்னை காணும் மக்களுக்கு
நிலமதனில் என் காட்சி உறுதியப்பா
வல்லமை கொண்டு உன் வடிவிலே
உலகோர்க்கு வந்து அருள் செய்வேன்
4. சிந்தைபட உன் நாமஜெபம் ஜெபித்துவரும் மக்களுக்கும்
செந்தூரான் என் அருள் பரிபூரணமாய் உண்டு உண்டு
உண்டான உன் தேக சித்தி சூட்சும நிலைகள் அனைத்தும்
உயர்வாக ஆறுமுகன் யான் காத்து வர
5. சிந்தைபட சுப்ரமணியர் யானும் தருகின்ற
செப்பிடுவேன் உணவு முறைகளை
மறுப்பின்றி அரங்கன் ஏற்றுக்கொண்டு
மண்ணுலகில் மாதவமுறைகள் சலனமற அரங்கன் தொடர்ந்து பயில
6. பயிலவே அரங்கனுக்கு பரிபூரணமாய்
சூட்சும சக்தி கூட்டி
அரங்கனை எழுந்தமர்ந்து நடக்க உண்டான
ஆற்றலும் வழங்கி அருள் புரிவேன்
7. அப்பனே அரங்கன் வழி அற்புதம் நிகழ்த்த வந்த சீடர்களே
ஒப்புகொண்டு அரங்கனின் பேரில் உயர்வான பூஜை செய்து வந்தால் போதும்
தப்பில்லா அரங்கன் வழி ஞான உலகம்
தடையற அமைந்து உலகில் பாதுகாப்பு காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–